செ.வெ.எண்: 988/2017 நாள்: 23.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஓகி புயலால் காணாமல் போன மீனவர்களை விமானம் மூலம் மீனவர்களுடன் சென்று தேடும் பணி நடைபெற்றது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலினால் கடலில் காணாமல் போன மீனவர்களை தேடும் பணியில், மீனவர்களால் சந்தேகத்தின் அடிப்படையில் தெரிவிக்கும் கடல் பகுதிகளில் கூடுதலாக வான்வழியாக தேடும் பணி மேற்கொண்டால், படகுகள் மற்றும் மீனவர்களை மீட்க முடியும் என மீனவர்களின் பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள் கோரிக்கை வைத்தனர்.

அதனடிப்படையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், விமானப்படை அதிகாரிக்கு கடிதம் மூலம் தொடர்பு கொண்டு அப்பகுதி குறித்து, நன்கு தெரிந்த மீனவர்களுடன் சென்று விமானபடை விமானம் மூலம் தேடும் பணியை மேற்கொள்ள கேட்டுக்கொண்டார். அதனடிப்படையில் பூத்துறையை சார்ந்த மீனவர்கள் திரு. ஏ. மேரிதாஸ், திரு. ரஞ்சித் பிரான்ஸிஸ் ஆகியோர்களுடன் விமானப்படை விமானத்தில் இன்று (23.12.2017 காலை) தேடும் பணி நடைபெற்றது. மீனவர்கள் குறிப்பிட்டுள்ள சந்தேகத்திற்குரிய இடமான மினிக்காய் தீவு (Minicai) மற்றும் அதன் மேற்கு பகுதிகளில் சுமார் 3 ½ மணி நேரம் காணாமல் போன மீனவர்கள் மற்றும் படகுகளை தேடும் பணி மேற்கொள்ளப்பட்டது. மினிக்காய் தீவிற்கு மேற்கே 130 நாட்டிக்கல் மைல் (6,173 ச.மீ பகுதி) வரை தேடும் பணி நடைபெற்றது.

இன்று நடைபெற்ற, விமானம் மூலம் தேடுதல் மற்றும் மீட்புபணி நடவடிக்கையின் போது எந்தவிதமான படகுகளோ, மீனவர்களோ கண்டறியப்படவில்லை என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**